7. அரசினர் தீர்மானம்

பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அரசினர் தீர்மானம். பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2011) இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

8. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்) 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2011), மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

2011 ஆகஸ்ட் 8]

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு :** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2011)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *இச்சட்டமுன்வடிவின்மீது பேசுவதாக இருந்தால் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.*

திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு என்பது மக்கள் தலைமை தாங்கி மக்கள் பங்கேற்கும் இயக்கமாகும். ஆனால் கடந்த ஆட்சியில் கூட்டுறவு இயக்கத்தைக் காற்றில் பறக்க விட்டு, ஜனநாயகத்தைக் காற்றில் பறக்கவிட்டு, தேர்தலே நடத்தாமல், தனி அதிகாரிகளை வைத்து நடத்தினார்கள். மேலும், தேர்தல் ஒன்றை நடத்தி அதன்மூலம் மிகப் பெரிய அதிகார அத்துமீறலே நடந்தது. இதை இந்திய கம்யூனிஸ்டு கட்சி உட்பட ஜனநாயகத்தை ஆதரிக்கின்ற கட்சிகள் அனைத்தும் எதிர்த்தன. இந்நிலையில் புதிதாக மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள நீங்கள், கடந்த ஆட்சியைப்போல் தனி அதிகாரிகளின் காலத்தை நீட்டிக்காமல் இதைக் கடைசியாக வைத்துக்கொண்டு வரும் மாதங்களில் தேர்தலை நடத்த வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கோருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

***திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாளையோடு இப்போதிருக்கிற தனி அலுவலர்களுடைய பதவிக் காலம் முடிவடைகிறது. ஆகவே, இப்போது இந்தத் திருத்தத்தை நிறைவேற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. அப்படி ஒரு கட்டாயத்தில் இந்தச் சபை இருக்கிறது. இந்தக் கட்டாயத்திற்குக் காரணமானவர்கள், கட்டாயத்திற்குக் காரணமாக இருந்த சூழ்நிலைகள் மீண்டும் நமக்கு நேராமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு இந்த அரசிற்கு இருக்கிறது என்பதை நான் வலியுறுத்துகிறேன். 2007 ஆம் ஆண்டு நடைபெற்ற*

@ 8–8–2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. அ. சவுந்தரராசன்] [2011 ஆகஸ்ட் 8

தேர்தலில் பின்பற்றப்பட்ட அணுகுமுறைகள், தில்லுமுல்லுகள், வேட்பு மனுவைக்கூட தாக்கல் செய்ய முடியாமல் தடுத்த ஏற்பாடுகள், அதை எதிர்த்து கூட்டுறவு உறுப்பினர்கள் ஒரு பெரும் கொந்தளிப்பை அடைந்தார்கள். அவர்களே அதை நிறுத்தி வைக்க வேண்டிய அளவுக்கான ஒரு எதிர்ப்பு வந்தது. இந்தத் தேர்தலை நடத்துவதற்குப் புதிய முறைகளை நாம் கையாள வேண்டும். அதற்குத் தனி ஆணையம் நிறுவ வேண்டும். அந்தந்த அமைப்புகளே நடத்திக்கொள்ளட்டும் என்கிற முறையிலே அதை பலவீனமாக விட்டுவிடக்கூடாது. மீண்டும் மீண்டும் இப்படிப்பட்ட தவறுகள் நிகழாமல் இருப்பதற்கான சூழ்நிலையை நாம் உண்டாக்க வேண்டுமென்று சொல்லி ஒரு காலவரையறையில் தேர்தலை நடத்த வேண்டும் என்கிற அந்த நிபந்தனையோடு இந்தத் திருத்தத்தை நான் ஆதரிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்தல் நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பிற்குப் பிறகு, உடனடியாக தீர்ப்பின் அடிப்படையில் தேர்தல் நடத்துவதற்கான வழிமுறைகள் நிச்சயமாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டும் எனக் கோருகிறேன்.

பிற்பகல் 2-05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2011) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை செவ்வாய்க்கிழமை (19-08-2011) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-06 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.